செய்தி வெளியீட்டு எண்.369 நாள்:9.7.2009

# செய்தி வெளியீடு

## முதலமைச்சர் விருது மற்றும் பன்னாட்டு அளவில் பதக்கங்கள் பெற்ற சிறந்த விளையாட்டு வீரர்களுக்கு ஊக்க உதவித் தொகையினை மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்

சிறந்த விளையாட்டு வீரர்களை உருவாக்கும் திறமையான பயிற்றுநர்கள் மற்றும் உடற்கல்வி இயக்குநர்கள், உடற்கல்வி ஆசிரியர்கள் சர்வதேச அளவில் பதக்கங்களை பெற்ற விளையாட்டு வீரர்கள் ஆகியோருக்கு முதலமைச்சர் விருது மற்றும் ஊக்கத்தொகையினையும் மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் இன்று (9.7.2009) தலைமைச் செயலகத்தில் வழங்கினார்.

சிறந்த விளையாட்டு வீரர்களை உருவாக்கும் பயிற்றுநர்கள், உடற்கல்வி இயக்குநர்கள், உடற்கல்வி ஆசிரியர்களுக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் விருது ஒவ்வொரு ஆண்டும் அவர்கள் உருவாக்கிய விளையாட்டு வீரர்கள் பெற்ற பதக்கங்களின் அடிப்படையில் வழங்கப்பட்டு வருகிறது. இந்த அடிப்படையில், 2006–07ஆம் ஆண்டிற்கான சிறந்த பயிற்றுநருக்கான முதலமைச்சர் விருது திரு.பி.சி. பாண்டியன் (கையுந்துபந்து – திருநெல்வேலி), சிறந்த உடற்கல்வி இயக்குநருக்கான முதலமைச்சர் விருது திரு. ஜி. முருகேசன் (முத்தையா அழகப்பா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி – கோட்டையூர்), சிறந்த உடற்கல்வி ஆசிரியருக்கான முதலமைச்சர் விருது (மகளிர்) திருமதி. கே.ஆர். இந்திராணி (அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளி–சின்னதடாகம், கோவை).

2007–08ஆம் ஆண்டிற்கான சிறந்த பயிற்றுநருக்கான முதலமைச்சர் விருது திரு. பி. பிராங்க் பால் (தடகளம் – திருநெல்வேலி), திரு. எம். ரியாஸ் (தடகளம் – சென்னை), சிறந்த உடற்கல்வி ஆசிரியருக்கான முதலமைச்சர் விருது (மகளிர்) திருமதி. வி. பிச்சையம்மாள் (அமலா பெண்கள் மேல்நிலைப் பள்ளி – முசிறி) ஆகியோருக்கு தலா ரூபாய் 1 இலட்சம் வீதம் காசோலைகளை மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.

மூன்றாவது ஆசிய பெண்கள் கபடி விளையாட்டு போட்டியில் தங்கப் பதக்கம் பெற்ற அணித் தலைவர் செல்வி எஸ். கவிதா அவர்களுக்கு ரூபாய் 5 இலட்சம், வீரதீர சாதனை புரிந்த கராத்தே வீராங்கனை திருமதி. டி. பானுமதி அவர்களுக்கு ரூபாய் 1 இலட்சம், ஆசிய சாம்பியன்ஷிப் போட்டியில் 50 மீட்டர் மார்பு நீச்சல் போட்டியில் தங்கப் பதக்கம் பெற்ற செல்வன் ஜெ. அக்னீஷ்வர் அவர்களுக்கு ரூபாய் 1 இலட்சம் ஊக்க உதவித்தொகையினை மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் வழங்கி, விளையாட்டு வீரர், வீராங்கனைகளை பாராட்டினார்.

2008ஆம் ஆண்டு துரோணாச்சாரியார் விருது பெற்ற சிறந்த கையுந்துபந்து பயிற்றுநர் திரு. ஜி.இ. ஸ்ரீதரன் அவர்களுக்கு பாராட்டு கோப்பையையும் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியின் போது, மாண்புமிகு சுற்றுச்சூழல் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் திரு. டி.பி.எம். மைதீன்கான், பள்ளிக் கல்வித்துறை செயலாளர் திரு.குற்றாலிங்கம், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் திரு. சத்தியேந்திர பிரதா சாஹு ஆகியோர் உடனிருந்தனர்.

* * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.